**செ. கு. எண்**: 231 **நாள்**: 27.06.2012

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை – 27.6.2012

இன்று பிற்பகல் சென்னை – பிராட்வேயிலிருந்து வடபழனி நோக்கி சென்று கொண்டிருந்த மாநகரப் பேருந்து அண்ணா மேம்பாலத்தின் மீது சென்று கொண்டிருந்த போது கட்டுப்பாட்டை இழந்து கவிழ்ந்ததில் பேருந்தில் பயணம் செய்த 38 நபர்கள் காயமடைந்துள்ளனர் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

இந்தத் துயரச் சம்பவத்தில் காயமடைந்து மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருபவர்களுக்கு நல்ல முறையில் சிகிச்சை அளிக்க மருத்துவமனை அதிகாரிகளுக்கு நான் உத்தரவிட்டுள்ளேன். மேலும், இவர்கள் அனைவரும் விரைவில் பூரண குணமடைந்து வீடு திரும்ப வேண்டும் என்ற என்னுடைய விருப்பத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தச் சாலை விபத்தில் பலத்த காயமடைந்தவர்களுக்கு 25,000/- ரூபாயும், சாதாரண காயமடைந்தவர்களுக்கு 10,000/- ரூபாயும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழக முதலமைச்சர்

**வெளியீடு: –**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**